**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 01.08.2025**

**O.S. 179/2016**

**வா.சா. 1** – ஜாஸ்மின்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு உரிமைப்பட்ட சொத்தின் சர்வே எண். 466/10 என்றால் சரிதான். இந்த வழக்கு சர்வே எண்.466/10 குறித்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 466/10 க்கான பழைய சர்வே எண்.82, 80 பி இன்னும் ஒரு சர்வே எண் ஞாபகம் இல்லை. 1976 லியே பழைய சர்வே எண் எடுக்கப்பட்டு புதிய சர்வே எண் கொடுக்கப்பட்டது என்றால் எந்த வருடம் என்று சரியாக ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கை பழைய சர்வே எண்ணின் படி அளந்து திட்டமிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புதிய சர்வே எண் வந்த பிறகு பழைய சர்வே எண் துலங்காது என்றால் சரியல்ல பழைய சர்வே எண்ணுக்கான அளவுகள் புதிய சர்வே எண்ணுக்கும் துலங்கும். வழக்கை பழைய சர்வே எண்ணின் படி அளந்து திட்டப்படுத்தி கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எங்கள் நிலத்தை உரிமை கொண்டாடி தொந்தரவு செய்யக்கூடாது என்று சொல்லி தாக்கல் செய்துள்ளேன். எனது நிலத்தை விட 3 அடி பிரதிவாதியின் நிலம் உயரத்தில் உள்ளது என்றால் சரிதான். புதிய சர்வே எண். 466/10 உட்பிரிவு செய்யப்பட்டு தனிசொத்தாக இருக்கிறது என்றால் சரியல்ல உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் அதுவும் எங்களுக்கு உரிமைப்பட்டது தான். புதிய சர்வே எண். 466/10 உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 466/10A, 10B, 10C என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. புதிய சர்வே எண். 466/10A க்கு மேற்கு பக்கம் உட்பிரிவு எண் 6 அமைந்துள்ளது என்றால் சரிதான். புதிய சர்வே எண். 466/10 ல் 2004 ம் வருடம் நான் கிரயம் பெற்றது 42 சென்ட் என்றால் சரிதான் மேற்படி பத்திரத்தில் பழைய சர்வே எண்ணும் குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் புதிய சர்வே எண். 466/10 ல் 2004 ம் வருடம் நான் கிரயம் பெற்றது 42 சென்ட் என்றால் சரிதான் மேற்படி பத்திரத்தில் பழைய சர்வே எண்ணும் குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரிதான் என்றால் சரிதான் பழைய சர்வே எண்ணும் குறிப்பிட்டுள்ளது.

வா.சா.ஆ.2 சொர்ணராஜ் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 லும் சர்வே எண். 466/10 ன் படி 42 சென்ட் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் பழைய சர்வே எண்ணின்படி 466/10 ல் 42 என்று குறிப்பிட்டுள்ளது. சொர்ணராஜ் என்பவருக்கு தங்கநாடாச்சி என்பவர் எழுதிக்கொடுத்தார் அவருக்கு வா.சா.ஆ.3 ன் படி பாகப்பத்திரத்தின் படி சொத்து கிடைத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் வழக்கு பட்டிகை சொத்து பி பட்டிகை சொத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனாருக்கு வா.சா.ஆ.3 ல் உள்ள ஏ பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தகப்பனாருக்கு வா.சா.ஆ.3 ல் உள்ள ஏ பட்டிகை சொத்தில் 10 வது ஐட்டம் புதிய சர்வே எண். 466/10 ல் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி ஏ பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்ட ராமநாடாரின் மகன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தந்தைக்கு வா.சா.ஆ.3 ல் ஏ பட்டிகை சொத்தில் 10 வது ஐட்டமாக ஒதுக்கப்பட்டது தான் புதிய புல எண்.466/6 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் நான் தாக்கல் செய்துள்ள 3 ல் துலங்குகிறது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு எவ்வித சொத்தும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளது பிரதிவாதியின் மதிப்பை குறைக்கிறது என்றால் சரியல்ல. முறையான ஆவணத்தின் படி தான் பிரதிவாதியின் தகப்பனாருக்கு சொத்து கிடைத்துள்ளது என்றால் சரியல்ல. முறையான ஆவணத்தின் படி தான் பிரதிவாதியின் தகப்பனார் பிரதிவாதிக்கு கொடுத்து பிரதிவாதி தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 மற்றும் 6 ல் 466/10 ல் 19 ஏர் வீதம் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடுவார்கள்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 5 ல் 1635/1977 ல் பிரதிவாதியின் தந்தைக்கு பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்து சொத்து எதுவும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதியின் தந்தைக்கு வா.சா.ஆ.3 ன் படி 466/10 ல் மேற்படி ஆவணத்தின் படி சொத்து இருக்கிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறு என்று பிழை திருத்த பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண்ணின் படி புதிய சர்வே எண் உட்பிரிவு செய்யப்படவில்லை என்ற வருவாய் துறையில் எவ்வித கோரிக்கையும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. உட்பிரிவு செய்யப்பட்டு புதிய சர்வே எண் நடப்பிற்கு வந்து சுமார் 50 ஆண்டுகள் ஆகிவிட்டது புதிய சர்வே எண் ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எந்த இடத்தில் எந்த பகுதியில் ஆக்கிரமிப்பு செய்ய வந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதியின் சொத்து எனது சொத்திற்கு உயரத்தில் உள்ளதால் எனது சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிக்க எவ்வித தேவையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல்துறையில் பணியாற்றி வருகிறார் ஆதலால் இவ்வாறு துணிந்து செயல்படுகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் பிரதிவாதியின் மீது பிரதிவாதிக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் வழக்கு தாக்கல் செய்ததால் புகார் அளிக்கவில்லை. பிரதிவாதி சர்வே எண்.466/6 எல்கையில் கற்கள் அமைத்து முள்வேலி அமைத்தார் அதனை நான் பலாத்காரமாக தகர்த்தி பல ஆயிரம் ரூபாய் நஷ்ம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி மூன்று மனுக்கள் தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஊதியம் செலுத்த வில்லை என்றால் சரிதான். எங்களுக்கு அறிவிப்பு இல்லை அப்போது எனது கணவர் வெளிநாட்டில் இருந்தார். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு IA 1/21 தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் நீதிமன்ற ஆணையர் நியமித்ததில் உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. மூன்றாவது மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்க தாக்கல் செய்ததற்கான மூல காரணங்கள் இருந்திருந்தால் முறையாக மேற்படி மனுக்களை பின்பற்றி உத்தரவு பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் 04.02.2016 அன்று பிரதிவதிகள் ஆக்கிரமித்ததாக குறிப்பிட்டுள்ள நாளில் அவ்வாறு எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்ய எவ்வித

மூலகாரணமும் இல்லை தேவையில்லாமல் பிரதிவாதிகள் மீது முறையின்றி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**